| தரம் - 09 | அலகுப்பரீட்சை | அலகு - சதவீதம் |
|---|---|---|

## பகுதி - I

(01). ரூ.350 இலாபத்துடன் ரூ.5 000 பெறுமதியான கைக்கடிகாரம் விற்கப்படுகின்றது எனின், கைக்கடிகாரத்தின் விற்பனை விலையைக் காண்க?

(02). ரூ.650 பெறுமதியான ஆடையானது ரூ.535 இற்கு விற்கப்படுகின்றது எனின், நட்டம் எவ்வளவு?

(03). ரூ.4 500 பெறுமதியான பொருளை 15% இலாபத்துடன் விற்கப்படுகின்றன எனின், விற்பனை விலையைக் காண்க?

(04). ரூ.350 பெறுமதியான புத்தகமொன்று ரூ.48 நட்டத்துடன் விற்கப்படுகின்றது. எனின் விற்பனை விலை யாது?

(05). 15% நட்டத்துடன் ரூ.1 700 இற்கு தொலைபேசியொன்று விற்பனை செய்யப்படுகின்றது. எனின், தொலைபேசியின் கொள்விலையைக் காண்க?

(06). 25% இலாபத்துடன் ரூ.7 500 இற்கு சுவர்க்கடிகாரம் விற்கப்படுகின்றது. எனின், கொள்விலை யாது?

(07). 16% நட்டத்துடன் விற்கப்படும் பொருளின் நட்டம் ரூ.96 எனின், கொள்விலை யாது?

(08). ரூ.8 000 பெறுமதியான ஆடையானது விற்பனையின் போது 7% கழிவு வழங்கப்படுகின்றது. ஆடைக்கு வழங்கப்படும் கழிவு விலையைக் காண்க?

(09). வீடு ஒன்றினை ரூ.5 000 000 இற்கு விற்கும் போது 3% தரகுப் பணம் வழங்க வேண்டும். எனின், வழங்க வேண்டிய தரகுப்பணம் யாது?

(10). ரூ.3 500 பெறுமதியான கைக்கடிகாரமொன்று 10% நட்டத்துடன் விற்கப்படுகின்றது எனின், நட்டம் யாது?

($10 \times 4 = 40$ புள்ளிகள்)

பகுதி - II

01. .

*a)* வியாபார நிலையமொன்று 20% இலாபம் வைத்து விலை குறிக்கப்படுகின்றது. விற்கும்போது குறித்த விலையில் 10% கழிவு வழங்கப்படுகின்றது எனின், ஆடை ஒன்றை ரூ.3 024 இற்கு வாங்குகின்றார் எனின்,

i. குறித்த விலையைக் காண்க.

ii. பொருளின் கொள்விலையைக் காண்க.

iii. இலாபம் எவ்வளவு?

iv. இலாபசதவீதம் யாது?

*b)* 4% நட்டத்துடன் ரூ.4 750 இற்கு விற்கப்படும் பொருளினை 4% இலாபத்துடன் விற்க வேண்டுமாயின், விற்பனை விலையைக் காண்க?

02. காணி விற்பனையின் போது 3% தரகு செலுத்த வேண்டியுள்ளது. தரகுபணமாக ரூ.15 000 செலுத்தப்படுகின்றது.

i. காணியின் விற்பனை விலை யாது?

ii. உரிமையாளருக்கு கிடைக்கும் பணம் யாது?

iii. இதே தரகுச் சதவீதத்தில் ரூ600 000 இற்கு விற்கப்படும் காணிக்கு செலுத்த வேண்டிய,

*a)* தரகுப்பணம் எவ்வளவு?

*b)* உரிமையாளருக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?

$(8 + 6 + 8 + 8 = 30$ புள்ளிகள்)